தினமணி 28/07/99

## பலியாகும் மீனவர்கள்

இராமேசுவரம் கடற் பகுதியில் இலங்கை கப்பற் படையால் தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவது அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. கடல் எல்லையில் காவல் காக்கும் இந்தியக் கப்பல் படை இலங்கை கப்பற் படையின் மீது எதிர்த்தாக்குதல் நடத்தத் தயங்குவது ஏன்? இந்தியாவின் எல்லைக்கோடு கார்கிலில் மட்டுமல்ல. தென் பகுதியான கடலிலும் உண்டு.

தி. நெடுஞ்செழியன்,
மயிலாடுதுறை.

## கார்கிலும் வீரப்பனும்

கார்கிலில் மிகக் கடுமையான சூழலில் போர் புரிந்து, அதிநவீன ஆயுதங்கள் தாங்கிய மூவாயிரத்திற்கும் மேலான அன்னியப் படையை, ஊடுருவல்காரர்களை விரட்டியடித்து நம் ராணுவம் மிகப் பெரிய சாதனை புரிந்துள்ளது.

ஒரு சிறிய மலைப் பகுதியில் மறைந்து கொண்டு பத்து ஆண்டுகளுக்கு மேல் நூற்றுக்கணக்கான கொலைகளையும் கொள்ளைகளையும் செய்துவரும் சந்தன வீரப்பனையும் அவனது கூட்டாளிகளையும் உயிருடன் பிடிப்பதோ அல்லது கூண்டோடு அழிப்பதோ இந்த ராணுவத்திற்கு இயலாத காரியம் அல்ல. அதற்கான முயற்சியை தமிழக, கர்நாடக அரசுகள் முனைப்புடன் செய்ய முன்வரவில்லை.

இனியும் தாமதிக்காமல் குறிப்பிட்ட காலவரைக்குள் இதனை செய்து முடித்து மக்களின் நல்மதிப்பைப் பெற மத்திய, மாநில அரசுகள் ஆவன செய்ய வேண்டும். இல்லையேல் இது அவர்களுக்கு ஒரு நிரந்தரத் தலைகுனிவைத் தந்து கொண்டிருக்கும்.

என். ஹரிஹர சுப்ரமணியன்,
சென்னை-30.

## பதவிகளுக்கு இழுக்கு

முன்னாள் நீதிபதி வி.ராமசாமி, முன்னாள் துணைவேந்தர் டாக்டர் பி.பி.ராஜன், முன்னாள் தேர்தல் ஆணையர் கே.மலைச்சாமி ஆகியோர் அதிமுகவில் சேர்ந்துள்ளனர்.

உயர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் சாதிச் சங்கங்களுக்குத் தலைமை ஏற்பதும், ஒரு கட்சியில் சேர்வதும் அவரவர்கள் பதவிக் காலத்தில் எவ்வாறு நேர்மையாக இருந்திருப்பார்கள் என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அவர்கள் இனி அரசியலுக்கு வந்து என்ன பெரிதாகத் தொண்டாற்றிவிட முடியும்?

பதவியிலிருக்கும் போது தங்களால் முடிந்த தொண்டை மக்களுக்குச் செய்திருக்கலாம். தற்போதை